# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## அசல் வழக்கு எண். 139/2015

சாட்சி : PW– 1
பெயர் : திரு. ரமேஷ் தேதி : 12.11.2024

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை )

**குறுக்குவிசாரணை**:– (1ம் பிரதிவாதி தரப்பில்)

சுரேஷ், பாலாஜி ஆகியோர்கள் என்னுடைய சகோதரர்கள். என்னுடைய தந்தை 11.11.1985 ம் தேதி இறந்துவிட்டார். என்தந்தை இறந்தபொழுது என்னுடைய வயது 10 ஆகும். என் தந்தை இறந்தபொழுது என் சகோதரர் சுரேஷ் என்பவரின் வயது 12 ஆகும். என் தந்தை இறந்தபொழுது என் சகோதரர் பாலாஜி என்பவரின் வயது 9 ஆகும். நான் B.L. படித்துள்ளேன். நான் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். என் சகோதரர் சுரேஷ் B.E., படித்துவிட்டு, தற்பொழுது வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். என் சகோதரர் பாலாஜி B.Sc., முழுமையாக படிக்கவில்லை. என் தாயாரின் பராமரிப்பில்தான் நாங்கள் இருந்துவந்தோம்.

என் தாயார் அரசு பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்து வந்தார். என் தந்தை இறப்பதற்கு முன்பு லாரி எடைபோடும் நிலையம் வைத்து தொழில் செய்து வந்தார். என் தந்தை இறக்கும் சமயத்தில் லாரி எடைபோடும் நிலையம் வைத்து தொழில் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1985ம் வருடத்தில் என் தாயார் மாதம் ரூ.25,000/– சம்பளமாக பெற்று வந்தார். 1985ம் வருடத்தில் என் தாயார் மாதம் ரூ.6,000/– சம்பளமாக பெற்று வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மாதேஸ்வரன் என் தாயாரின் அக்கா மகன் ஆவார். எனக்கு பெரியம்மா மகன் ஆவார்.

நாங்கள் சிறுவயதாக இருக்கும்பொழுது 1ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியின் தாயாரும் என் தாயாருக்கு பல உதவிகள் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா முதல் அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் 4,200 சதுர அடி ஆகும்.

தாவா 2 வது அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் 800 சதுர அடி ஆகும். வா.சா.ஆ.–2 ஆவணம் செல்லாது என்றுதான் வழக்கு போட்டுள்ளேன். வா.சா.ஆ.–2 ஆவணத்தின்படி கிரய தொகை ரூ.72,500/–க்கு முதல் பிரதிவாதிக்கு என் தாயார் தனக்காகவும், நானும் என் சகோதரர்களும் இளவர்களாக இருந்ததால் கார்டியனாக இருந்து விற்பனை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 2015 ம் வருடத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டபொழுது என்னுடைய வயது 39 ஆகும். 2015 ம் வருடத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டபொழுது என் சகோதரர் சுரேஷின் வயது 41 ஆகும். வழக்குரையில் சுரேஷின் என்பவரின் வயது 45 என தவறாக உள்ளது. 2015 ம் வருடத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டபொழுது 3 ம் பிரதிவாதியின் வயது 37 ஆகும்.

என்னிடம் காட்டப்பட்ட 01.01.1987 முதல் 26.07.2015 தேதி வரையான வில்லங்க சான்றில் 09.02.1987 தேதிய வாசா.ஆ.–2 கிரய பத்திரம் பற்றிய பதிவு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.வ.எண். 139/2015 வழக்கில் வழக்குரையில் முதல் அயிட்ட சொத்து விவரத்தில் 4,200 சதுர அடி காலி இடம் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தாவா முதல் அயிட்ட சொத்தில் நான் சைக்கிள் ஸ்டேன்ட் ஷெட் போட்டுள்ளேன். தாவா முதல் அயிட்ட சொத்தில் 1 ம் பிரதிவாதி கிரயம் பெற்ற பிறகு சைக்கிள் ஸ்டேன்ட் ஷெட் போட்டார் என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்து முழுவதும் எனக்கும் என் அண்ணன் தம்பிகளுக்கும் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த வழக்கில் பாலாஜி என்பவரை 3 வது பிரதிவாதியாக மாற்றிய பிறகு எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. ஆனால் வழக்கு தாக்கல் செய்தபொழுது நானும் பாலாஜி என்பவரும் சேர்ந்துதான் வழக்கு தாக்கல் செய்தோம். தாவா சொத்து முதல் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால்தான் பாலாஜி என்னுடன் சேர்ந்து தொடர்ந்து வழக்கு நடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோரினால் சொத்தின் மதிப்பு

குறிப்பிடப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். 2015ம் வருடத்தில் வழக்கு தாக்கல் செய்தபொழுது ஒரு சதுர அடி மதிப்பு ரூ.1,000/– ஆகும். தற்பொழுது ஒரு சதுர அடியின் மதிப்பு ரூ.1,650/– ஆகும். வழக்குரையில் முதல் அயிட்ட சொத்தின் மதிப்பை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் முதல் அயிட்ட சொத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ரூ.20,00,000/– செலவு செய்து சைக்கிள் ஷெட் போட்டிருந்தேன். வழக்கு தாக்கல் செய்தபொழுது சைக்கிள் ஷெட்டின் மதிப்பு ரூ.20,00,000/– ஆகும். முதல் அயிட்ட சொத்தின் மதிப்பு வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் ரூ.62,00,000/– என்று சொன்னால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் முதல் அயிட்ட சொத்தின் மதிப்பை சரியாக மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணத்தை செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல.

தாவா 2வது அயிட்ட சொத்தின் மதிப்பு ரூ.15,00,000/– என வழக்குரையில் சொல்லியுள்ளேன். அந்த தொகையில் பாதி மதிப்பிற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சரியாக மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

( 1ம் பிரதிவாதியின் தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.